பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 25 திங்கட் … THAYAN A Lively National Tamil Daily கதிர் 317

# தமிழக மக்க … புலிகளுக்கு எதிராக திருப்ப 'றோ' முயற்சி

## அதற்கு கருணாநிதியும் உடந்தை கோப்பாயில் கரிகாலன் பேச்சு

யாழ்ப்பாணம், ஒக்டோபர் 11

தமிழக மக்களின் அபிமானம் பெற்ற கருணாநிதியை விடுதலைப் புலிகள் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாகக் கூறி தமிழக மக்களை விடுதலைப் புலிகளுக்கு எதிரான வழியில் திசை திருப்ப இந்திய மத்திய அரசும், உளவுப் பிரிவான 'றோ' அமைப்பும் முயன்றுள்ளன. கலைஞர் கருணாநிதியும் அவர்களின் இந்த முயற்சிக்கு உடந்தையாக இருக்கிறார்.

இங்கு தமிழ் ஈழம் பிறப்பதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. அது தமிழ் நாடு பிரிவதற்கு தளமாக அமைந்துவிடும் என இந்தியா அஞ்சுகிறது.

தமிழீழ அரசியல்துறைத் தலைமைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதல் களப்பலியான பெண் போராளி 2 ஆம் லெப். மாலதியின் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் வீரவணக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோப்பாய் கந்தசுவாமி கோயில் முன்பாக நேற்று மாலை நடந்த வீரவணக்கக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியப் படைகளுடனான போர் ஆரம்பித்த முதல் நாளின் நினைவையும் இன்று நாம் இந்த நிகழ்வின் மூலம் நினைவு கூருகிறோம்.

எமது விடுதலைப் போரை நசுக்கும் இந்திய அரசின் செயல் — இந்தியப் படைகள் இங்கிருந்து வெளியேறியதோடு முடிந்து விடவில்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலித் தொழிலாளர் மிதிவெடியில் சிக்கினர்

### ஒருவர் கால் இழப்பு, இருவர் காயம்

கிளாலி கரையோரப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் மூவர் காயம் அடைந்தனர்.

இவர்களில் மிதிவெடியில் சிக்கியவர் இடது கால் பாதத்தை இழந்தார். அருகில் நின்றவர்களே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

உடுவில் ஆலடியைச் சேர்ந்த சந்திரயா சிவநாதன் (வயது 30) என்பவரே இடது கால் பாதம் துண்டிக்கப்பட்டவர் ஆவார்.

அதே இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் சிமிதின்சன் (வயது 20 கொட்டடி முத்தமிழ் வீதியைச் சேர்ந்த சண்முகராசா வனராசா (வயது 25) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் மூவரும் கிளாலியில் பொருள்கள் ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள் ஆவர்.

தாம் வேலை செய்யும் பகுதியில், சாவகச்சேரிக் குப்பை கூளங்களை அகற்றித் துப்புரவு செய்து கொண்டிருந்த போதே இவர்கள் மிதிவெடியில் சிக்கினர் என்று கூறப்படுகிறது. காயம் அடைந்தவர்கள் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(இ-15)

## தமிழீழ - இந்தியப் போர்: நேற்று 6 ஆண்டு பூர்த்தி

தமிழீழ - இந்தியப் போர் ஆரம்பமான ஆறாம் ஆண்டு பூர்த்தி தினம் நேற்றாகும்.

அமைதி காக்கவென தமிழீழத்திற்கு வந்த இந்தியப் படையினர் ஆறாயிரம் அப்பாவித் தமிழ்மக்களைக் கொன்று குவித்தனர்.

இந்தியப் படையின் ஆக்கிரமிப்பின்போது தமிழர்களின் கோடிக்கணக்கான உடைமைகள் அழிக்கப்பட்டன.

தமிழீழ-இந்தியப் போரில் இந்தியப் படையினர் தரப்பில் ஆயிரத்து 165 பேர் கொல்லப்பட்டனர். இன்னும் பல ஆயிரக்கணக்கான படையினர் காயமடைந்தனர். அவர்களில் ஏராளமானோர் ஊனமுற்றனர்.

இந்தப்போரில் வீரவேங்கை ஜொன்சன் என்ற போராளியே முதன் முதலில் வீரச்சாவு அடைந்தார்.

(ஒ)

## மாலதி நினைவாக
## மானிப்பாயில் நேற்று மாதிரிக் குடியிருப்பு திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் நினைவாக நேற்று மாலை 4 மணியளவில் மானிப்பாய் தெற்கில் மாதிரிக் குடியிருப்பு திறந்து வைக்கப்பட்டது.

மகளிர் அமைப்பின் சண்டிலிப்பாய் வட்டப் பொறுப்பாளர் செல்வி நற்குணம் சுவைச்சுடர் ஏற்றி வைத்தார். அதில் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப தலைவர் திரு. தம்பி குடியிருப்பைத் திறந்து வைத்து, திறப்புக்களைக் கையளித்தார்.

36 வீடுகளைக் கொண்ட இந்தக் குடியிருப்பில், சமீபத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து வந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஒ)

## கிளாலியில் ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், ஒக். 11

கிளாலிப்பகுதியிலும் குஞ்சுப்பரந்தன் பகுதியிலும் நேற்று இரவு ஹெலி பரவலாக தாக்குதல்களை நடத்தியது.

கரையோரப் பகுதிகளை நோக்கி ஹெலியில் இருந்து றொக்கெட் தாக்குதலும் நடத்தப்பட்டது என்றும் பூநகரிப் பகுதியில் இருந்து நேற்று நள்ளிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

கிளாலியில் இருந்து குறிப்பிட்டளவு படகுகள் அக்கரைக்குச் சென்று பயணிகளுடன் திரும்பி வந்ததாகத் தெரியவந்தது.

இதேவேளை, கிளாலிப் பகுதியில் நீளமான, முன்பகுதி கூராகவிருந்த போதி வெடி ஒன்றை பயணிகள் கண்டு தகவல் தெரிவித்ததை அடுத்து விடுதலைப் புலிகள் அதனை மீட்டெடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-9-15)

## ஷெல் வீச்சு

ஆனையிறவு முகாமில் இருந்து நேற்றிரவு கிளாலி பகுதியை நோக்கி பலத்த ஷெல் வீச்சு நடத்தப்பட்டது. கடற்கரையோரப் பகுதிகளில் அடுத்தடுத்து ஷெல்கள் விழுந்து வெடித்தன.

[ஒ-9-10]

## காமினி கட்சி தனித்தே இயங்கும் எக்கட்சியுடனும் ஒப்பந்தம் இல்லை

ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனோ ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எந்தவித ஒப்பந்தத்துக்கும் வரவில்லை ஜீ. எம். பிரேமச்சந்திராவுக்கு முதலமைச்சர் பதவி பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனேயே மாகாண சபைகளை அமைக்கும் போது பொது மக்கள் ஐக்கிய முன்னணியை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆதரித்தது.

தேற்றண்டலாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்கா கூறியதாக பி. பி. சி. சிங்கள சேவையின் செய்தியாளரான எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விஜேதுங்காவுடனான பேச்சுவார்த்தையின் போது தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியதாகவும்—

தமக்கும் அரசுக்கும் இடையில் இரகசியமான பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என மறுத்ததாகவும் காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-6)

## கூட்டரசு அமைக்கும் நிலையில் பெனாஸீர்

இஸ்லாமாபாத், ஒக் 11

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோ, சிறிய கட்சிகளுடன் இணைந்து மத்தியில் கூட்டரசு அமைக்கும் நிலையில் தாம் இருப்பதாக அறிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் இவரது கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறியது தெரிந்ததே.

நவாஸ் ஷெரீப் தலைமையிலான முஸ்லிம் லீக், மக்கள் கட்சிக்கு அடுத்ததாக தனித்து கூடுதல் ஆசனங்களைப் பெற்றுள்ளது.

முஸ்லிம் லீக்கும் ஆட்சி அமைக்கும் நோக்கத்துடன் சிறிய கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகிறது.

அதே சமயம் சனிக்கிழமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய-இலங்கை உறவு பாதிக்கும் நிலையில்!

கொழும்பு, ஒக். 11

ராமேஸ்வரம் கடற் பரப்பில் ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதல் சம்பவமானது, இந்திய - இலங்கை உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளதாக பி. பி. சி. தெரிவித்தது.

இதேவேளை, இந்திய மீனவர்கள் கொலையுண்டது குறித்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமது கண்டனத்தை மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களின் நம்பகத்தன்மையை மத்திய அரசு இழக்க நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையில், ஸ்ரீலங்கா கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடத்திய தாக்குதலில் சமீர், பழனிச்சாமி, ஆண்டி, இராமமூர்த்தி ஆகிய நான்கு தமிழக மீனவர்களே பலியாகினர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

# இந்திய கடல் எல்லைக்குள்ளேயே தமிழக மீனவர் கொலையுண்டனர்

## மத்திய அரசு கண்டனம்

கொழும்பு, ஒக் 11

ராமேஸ்வரம் கடற்பரப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஸ்ரீலங்கா கடற்படையினர் நான்கு தமிழக மீனவர்களை சுட்டுக் கொன்ற சம்பவத்தை இந்தியா கடுமையாகக் கண்டித்துள்ளது.

இந்திய கடல் எல்லைக்குள் வைத்தே மீனவர்கள் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் உள்ளனர் என்று இந்திய மத்திய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. ஸ்ரீலங்கா கடற்படையினரை கொழும்பு அரசு தனது … இந்திய அரசு இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

இதேசமயம், மீனவர்கள் கொலையுண்டது குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகமும் கண்டித்துள்ளது. இலங்கை அரசு இப்படுகொலை பற்றி புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும், இச்சம்பவம் போன்று எதிர் காலத்திலும் திரும்பத் திரும்ப நடைபெறா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இந்தியத் தூதரகம் கேட்டுக் கொண்டிருப்பதாக அதிகார வட்டார

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய பிளைமதிவர் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தரமான வளர்ப்பு. நியாய விலை. இல. 29, சுவாமி ஒழுங்கை, கண்டிக்குளி. (27607)

## சமூகக்கல்வி O/L

ஆண்டு 9, 10, 11 வரலாறு சமூகக்கல்வி வினா-விடை நூல்கள் விற்பனையாகின்றன. பரீட்சை மீட்டலுக்கு ஆயத்தம் செய்வதற்கு ஏற்றவை. ஆக்கம்: நா. நவில் வாசகம் "குரு" வெளியீடு: (27606)

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் சிவபாக்கியம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கும், யாழ். வைத்தியசாலைக்கும் இடையில் 8-10-93 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (27600)

டாக்டர் மயில்வாகனம் தணிகாசலம் ஆகிய நான் 17-9-93 அன்று மாலை திருநெல்வேலி சந்தியிலிருந்து கோண்டாவிலூடாக இணுவில் வைத்தியசாலை நோக்கி வரும்போது குறிப்பிட்ட தொகைப்பணத்துடன் சிறிய பை ஒன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் திருமதி அப்புத்துரை, மகேஸ் மஹால், கோண்டாவில் கிழக்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6685)

## திருத்தவேலைகளுக்கு

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா றேடியோ அன்ட் வோச் வேக்ஸ், 284, கஸ்தூரியார் வீதி, (வாவியின் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-6176)

## ஊக்குவிப்பு பிரதேசம்

உரும்பராய், ஒக். 11

உரும்பராய் வடக்கு கிராம சேவை அலுவலர் பிரிவு, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் விவசாய உற்பத்தி ஊக்குவிப்புப் பிரதேசமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினால் 6 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தலா 7ஆயிரத்து 500ரூபா கடனாக வழங்கப்படவுள்ளது. (த-154)

## விவசாய பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்: மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படவுள்ள ஒன்பது மாத கால விவசாயப் பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

இப்பயிற்சி நெறிக்கென தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று காலை 8-30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திற்கு தவறாது சமுகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (த)


BECON
யாழ்ப்பாணம்.
93 O/L
DAY CLASS
வினா - விடை
வகுப்பு
ஆரம்பம்;
12 — 10 — 1993
செவ்வாய் 8 மணி
விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
12-00 - 1-00 மணி
(இ-6186)



COMPUTER கல்வி
Diploma in Computer Programming
BASIC Language
4 MONTHS
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்: 17 - 10 - 1993
8 30 மணி

C. I. M. A., I. A. B., Lotus 1 — 2 — 3
SHORT — HAND & TYPING
நடைபெறுகின்றன.

Lectures by: S. P. Sivapathasundaram
M. I. D. P. M. (Lond)
FEES: மாதம் ரூபா 400/- மட்டுமே

மேலும் விபரங்களுக்கு:
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
(இ 6280)



இதோ வெளிவந்து வேகமாக
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன

சிவம் இன்டஸ்றீஸாரின்
நவீன தீபாவளி வாழ்த்து மடல்கள்

விலை விபரம்

| | | | |
|---|---|---|---|
| No. 1 கட்டிங் காட் | 100க்கு | — | 1,200.00 |
| No. 2 போட் காட் 10x7 | ” | — | 1,000-00 |
| No. 3 கட்டிங் காட் | ” | — | 750 00 |
| No. 5 கட்டிங் காட் | ” | — | 650-00 |
| பெரியபோஸ்காட் சினிமா | ” | — | 200-00 |
| சுவாமி போஸ்காட் | ” | — | 110-00 |

சிறுவர் புத்தகங்கள்:
சித்திரத் தமிழ் மலர். சிறுவர் தமிழ் வாசகம்
Essy A, B, C, நீதிக் கதைகள் I, II

தற்போதைய சூழ்நிலை காரணமாக எமது வெளியீடுகள் பின்வரும் இடங்களில் மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம்.

மக்மிலன் புத்தகசாலை,
இல. 3, பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந் புத்தகசாலை,
நல்லூர். 165, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(பொம்பேட் பிரதிகளுக்கு நாட வேண்டிய இடம்)
(இ-6189)


# தொழிற்சாலைகள் சட்டம் விரைவில் திருத்தப்படும்

தொழிலாளர்களுக்கு மேலும் சிறந்த பாதுகாப்பினை வழங்கும் முகமாக தொழிற்சாலைகள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

தொழிற்சாலைகள் சட்டம் 1942 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் முதல் தடவையாக அதனைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கும்போது தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கொள்கைகளை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக அரசாங்கம் சட்டங்களைப் பிரகடனப்படுத்தியுள்ளது. ஆயினும் இவ்வேலை கொள்வோர் இதனைப் பின்பற்றாத காரணத்தால் வழியரின் உயிரிழக்கவும் காயமடையவும் நேரிடுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் திருத்தங்களைச் செய்வதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த)

# பழப்பாகு தொழிற்சாலை முல்லைத்தீவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 11

முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்க ஆதரவுடன் வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் காணப்படும் பெருவாரியான பனம் பழங்களைப் பயன்படுத்தி பழப்பாகு பதனிடும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது.

அத்துடன் பனை அபிவிருத்தி சபையின் கீழ் தனித்துவமான பெண்கள் நிறுவனமாக உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனமும் ஆரம்பிக்கப்படும்.

அண்மைக்கால அனர்த்தங்களால் பாதிப்புற்ற, சுயதொழிலில் ஈடுபட்ட மகளிரையும், பனைசார் உற்பத்திகளில் ஈடுபடுகின்ற மகளிரையும் கிராம ரீதியில் இணைத்து அவர்களின் சமூக, பொருளாதாரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். (த)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம்:
03 — 02 — 1943

அஸ்தமனம்:
22 — 09 — 1992

அமரர்
### கந்தப்பிள்ளை தருமலிங்கம்

திதி: 11 - 10 - 1993

அன்பின் திருவுருவாய் அறிவின் திருவிளக்காய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
உலாவி வருவாய் என்றிருந்தோம்
நீ எங்குதான் சென்றாயோ

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன், மகள்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், (27610)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

| ஆண்டவன் படைப்பு: | அன்னையின் அழைப்பு: |
|---|---|
| 20 — 03 — 1950 | 28 — 08 — 1993 |



### கந்தையா நவரட்ணம்

சின்ன சாவடியின் சிறிவந்த ஷெல்
உந்தன் சீராமேனியைச் சிதைத்துத்தான்
சென்றதுவோ
துர்க்கை அம்மாளின் தூய்மையின்
தொண்டனாய் நீங்கள் திகழ்ந்தீர்கள்
உங்களை தங்க வைத்துத் தாயவளாம்
தரணி மீதுனை வைக்க தயியாது போனதேனோ
உங்கள் செல்ல நடையும் புன்சிரிப்புடன்
கூடிய பகிடியையும் நாம் இனி
யாரிடம் காண்போம் ஐயா!

அன்னாரின் மரணத்தின் போது எங்களின் துயரங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, சகோதரர், மாமி,
மருமக்கள், பெறாமக்கள், மைத்துனர்

மயிலணி,
சுன்னாகம். (6686)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 — 06 — 1939 | 28 — 08 — 1993 |



தெல்லிப்பழை
### திருமதி பங்கஜதேவி சாந்தராசா

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் எமது அன்னையின் உயிர்பிரிந்த வேளையில் துணைபுரிந்த தொண்டர்களுக்கும், வைத்தியசாலையில் ஆயகருமங்களில் துணைபுரிந்த வைத்தியர்களுக்கும், பிறக்கும், மரணச் சடங்குகளில் கலந்து கொண்டு மன ஆறுதல் தந்த கல்லூரி அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், வெளியோர்கள், உறவினர்கள் யாவர்க்கும் மரணச் சடங்குகளில் துணைபுரிந்த அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம்மை உருவாக்கி உண்மை அறிவூட்டி
செம்மை நெறிகாட்டிச் சீராக வளர்த்திட்டீர்
அம்மா - எமது கடன் ஆற்றிடமுன் எமைப்பிரிந்து
சென்றீர் - உளம்நெகிழ்ந்து செலுத்துகிறோம் -
அஞ்சலிகள்!

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள்.

துர்க்கை அம்மன் கோவிலடி,
தெல்லிப்பழை. (27608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கலைஞரின் நாடகம்

சுதந்திர தமிழீழம் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு திராவிட முன்னேற்றக்கழகம் ஆதரவளிக்கவில்லை.

இவ்வாறு பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் தெரிவித்திருக்கிறார் தி. மு. கவின் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி.

அரசியல்வாதிகள் என்போர் எப்போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றால் போலத் தம்மை மாற்றிக் கொள்பவர்கள். நிலையான கொள்கை — நிறம் — இல்லாத பச்சோந்திகள். அதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குபவர்கள் தமிழக அரசியல்வாதிகள்.

தமிழகத்து மக்கள் எப்போதுமே, ஈழத் தமிழர்களின் விவகாரத்தில் அக்கறையுடையவர்களாகவும் போராட்டத்துக்கு ஆதரவாகவும் இருந்தார்கள், இருக்கிறார்கள். ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் தமிழகத்திலேயே இயங்கும் அளவுக்கும் பயிற்சி பெறும் அளவுக்கும் தமிழக மக்கள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், துணையாகவும் இருந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி ஈழத்தமிழர் விவகாரத்தை முன்வைத்து தமிழக அரசியல் கட்சிகள் தமக்குச் சொந்த லாபம் தேடியதுண்டு. அப்போதும் கூட கலைஞர் கருணாநிதி ஈழத்தமிழர் விவகாரத்தில் திட்டவட்டமான கொள்கையுடையவராக இருக்கவில்லை. மதில்மேல் பூனையாகவும், வழுவி நழுவி காரியம் ஆற்றுபவருமாகவுமே அவர் அப்போது விளங்கினார்.

ஆகக் கடைசியாக முதலமைச்சராக இருந்த போது, வி. பி. சிங் தலைமையிலான கூட்டணியில் தி. மு. காவும் அங்கம் வகித்தது. ஆனால் தி. மு. க. தலைவர் என்ற வகையில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களுக்கு உதவக் கூடிய எந்த உருப்படியான பணியையும் கருணாநிதி ஆற்றியதில்லை.

எனவே அவர் முதலமைச்சர் பதவி இழந்து, எதிர்க்கட்சித் தலைவர் பதவி தானும் கிடைக்காதவராக, தமிழக அரசியலில் மூன்றாவது அணியாகத் தள்ளப்பட்டிருக்கும் வேளையில், ஈழத் தமிழர்களுக்கோ அல்லது அவர்களது போராட்டத்துக்கோ ஆதரவாக நடந்து கொள்வார் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

ஆட்சிப் பதவிகள் பறிபோனது போல தி. மு. கவின் தலைமைப் பதவியையும் இழக்கும் ஆபத்து இப்போது அவரைச் சூழ்ந்துள்ளது. அந்த ஆபத்திலிருந்து தப்புவதற்காக தமது அரசியல் 'ஸ்ரண்டு'களையும், குத்துக்கரணங்களையும், அரசியல் குள்ளத்தனங்களையும் கட்டவிழ்த்திருக்கிறார். அவ்வளவுதான்!

விடுதலைப் புலிகள் தன்னைக் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்தமை. அரசியலிலிருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்தமை, பின்னர் அந்த அறிவிப்பை வாபஸ் வாங்கிக் கொண்டது தமிழீழப் போராட்டத்துக்கு ஆதரவில்லை என்று கூறியிருப்பது ஆகிய அனைத்தும் அவரது அரசியல் "கலை" த்துவத்தை வெளிப்படுத்தும் காட்சிகளே!

★ தி. மு. க. தலைமைப் பதவியை தக்க வைத்துக் கொண்டு, பின்னர் அதனைத் தமது மகனுக்குச் சொத்து மாற்றுவது.

★ தான் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர் என்பதை வெளிப்படையாக அறிவித்து காங்கிரஸோடு கைகோத்து ஆட்சிபீடம் ஏறுவது.

இந்த இரண்டு நோக்கங்களையும் அடைவதற்காகவே கலைஞர் தமக்குள்ள அரசியல் கலைத் திறமைகளை முன் சொன்ன காட்சிகளாக அமைத்திருக்கிறார்.

இந்தக் காட்சிகளுக்குப் பின்னால், தமிழகத்தில் காங்கிரஸ் முதற்கொண்டு தி. மு. க. ஈறாக அரசியல் தலைவர்கள் விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழக் கோரிக்கைக்கும் எதிரானவர்கள் — தமிழக மக்கள் எதிரானவர்கள் — என்பதனைக் காட்டுவதற்கான பின்னரங்கம் ஒன்று உருவாக்கப்படுகிறது. அதுவே இப்போது கருணாநிதியையும் ஆட்டுவிக்கிறது; அல்லது ஆட்டத் தூண்டியிருக்கிறது அதுவே உண்மை நிலை!

## தேர்வாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த தேர்வாளர்கள் கூட்டம் நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறும்.

முதன்மைத் தேர்வாளர் துணைத் தேர்வாளர்களுக்கான கூட்டங்கள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

நாளை காலை 8.30 மணிக்கு:- யாழ். கோட்டம், வேலணைக் கோட்டம், — யாழ். மத்திய கல்லூரியில்.

நாளை காலை 10.30 மணிக்கு:- மருதனார்மடம் கோட்டம் — இராமநாதன் கல்லூரியில்.

நாளை பிற்பகல் 1 மணிக்கு பண்டத்தரிப்புக் கோட்டம்— மெமோறியல் கல்லூரியில்.

நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு:- வடமராட்சி கோட்டம் — வருத்தித்துறை மெதடிஸ்த் பெண்கள் கல்லூரியில்.

நாளை மறுதினம் பி. ப. 1.30 மணிக்கு:— தென்மராட்சிக் கோட்டம் — சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில்.

(ஓ)

## சூழல் பாதுகாப்பு கூட்டம்

நெல்லியடி, ஒக். 11

சூழல் பாதுகாப்புப் பற்றிய கூட்டம் எதிர் வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-109)

# மாலதி நினைவு தினம் நேற்று குடாநாட்டில் அனுஷ்டிப்பு

## கோப்பாய்வெளி நினைவுத் தூபியில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 11.

தமிழ் ஈழ போராட்டத்தில் முதன் முதல் களப்பலியான பெண் போராளியும் -இந்தியப் படைகளுடனான யுத்தத்தில் முதல் முதல் வீரச்சாவடைந்த போராளியுமான இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் 6 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று குடாநாடு எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

கோப்பாயில் கோப்பாய் வெளியில் மாலதி களப்பலியான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நேற்று மாலை 4 மணிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்வில் மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா தேசியக் கொடியை ஏற்றினார். தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் நினைவுத் தூபியில் சுடரேற்றி வைத்தார். விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. தேவர் மாலை அணிவித்தார்.

பின்னர் கோப்பாய் சந்தியில் அமைக்கப்பட்ட செல்வி மாலதியின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அந்த உருவப்படத்தை திரைநீக்கம் செய்தார். மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கணேஸ் உருவப்படத்துக்கு மாலை அணிவித்தார். பின்னர் நேற்று மாலை 6 மணிக்கு நினைவு வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. (இ-5)

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விவசாய, உள்ளகப் பயிற்சிகள்

## கெயர் அமைப்பு வழங்கும்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யு. என். எச். சி. ஆர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அவசர விவசாய புனருத்தாரண திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 21 கோடி ரூபாவில் —

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விவசாய மற்றும் உள்ளக பயிற்சிகளை அளிக்க கெயர் அமைப்பு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள இத்திட்டம் குறித்த அரச சார்பற்ற நிறுவனங்கள் அறிந்து தெரிவித்துள்ளன.

பெரும்பாலான அரச சார்பற்ற அமைப்புக்கள் அடிப்படை நிவாரண அமைப்புக்களாக இயங்கி அவசர உதவிகளை — அகதிகளுக்கு தற்காலிக நிவாரணங்களை — வழங்கி வழக்கப்பட்டவையாக இருப்பதால் —

விவசாயத் திட்டத்துக்கான திறமை நிர்வகிக்கும் ஆற்றலை அபிவிருத்தி செய்ய இப்புதிய திட்டத்தின் கீழ் அந்த அமைப்புகளுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்வதாக கெயர் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால் விவசாயத்துக்கான கடன் திட்டத்தை கடந்த மூன்று வருடங்களாக நடைமுறைப்படுத்தி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அதில் நல்ல அனுபவத்தை கொண்டுள்ளன என்றும் —

இப்பொழுது நிதி ஒதுக்கீடை பயிற்சி என்ற பெயரில் செலவிடாது, விவசாயிகளுக்கு தேவையான பொருள்களை கப்பல் மூலம் கொண்டு வந்து குறைந்த விலையில் பொருள்கள் விவசாயிகளுக்கு கிடைக்க வழிசெய்ய முடியும் என்றும் — அரச சார்பற்ற நிறுவனங்கள் சுட்டிக்காட்டி உள்ளன. (த-3)

# யாழ். மாவட்ட மீனவருக்கு நிவாரணம் இல்லை

## அமைச்சு மீண்டும் அறிவிப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படமாட்டாது என புனர்வாழ்வு அமைச்சு மீண்டும் அறிவித்துள்ளது.

கடல் வலயச் சட்டம் அமுலில் இருப்பதால் மீனவர்கள் கடலில் சென்று தமது தொழில்களை மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும் இதனால் மீனவர்களுக்கான நிவாரணத்தை மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் புனர்வாழ்வு அமைச்சை கேட்டிருந்தார்.

ஆனால் யாழ் மாவட்ட மீனவர்களுக்கான நிவாரணம் இனிமேல் வழங்கப்படமாட்டாது என புனர்வாழ்வு அமைச்சு யாழ். அரசாங்க அதிபருக்கு மீண்டும் அறிவித்துள்ளது. (இ-17)

# இறைவரி திணைக்கள ஊழியருக்கு 3 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை!

கொழும்புத்துறை, ஒக். 11

யாழ் மாவட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடமை புரியும் சகல தர ஊழியர்களுக்கும் 3 மாதங்களாக சம்பளக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்துடன் இது குறித்து பல தடவைகள் தொடர்பு கொண்டும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை என்று மேற்படி திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (த-80)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாப் போட்டிகளில், யாழ்ப்பாணக் கோட்ட மட்டத்திலான மாணவர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் இன்று திங்கள் காலை 8.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ)

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், ஒக். 11

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகம் 'பாரதி' கற்றுக்கேடயத்துக்காக சழக மைதானத்தில் நடத்திவரும் "செற்-அப்" முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை இரவு 7-00 மணிக்கு மின்னொளியில் நடைபெறும்.

இறுதி ஆட்டத்தில் இரவு 8-00 மணிக்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக "ஏ" அணியும் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக "ஏ" அணியும் மோதும்.

இரவு 10.00 மணிக்கு பரிசளிப்பு விழா இடம்பெறும்.

இறுதி ஆட்டத்துக்கு முன்னர் 7.15 மணிக்கு நடைபெற உள்ள பெண்களுக்கான காட்சி கரப்பந்தாட்டப் போட்டியில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதும். (இ)

## பல்கலைக்கழக மாணவருக்கு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ். பல்கலைக் கழகத்தில் சென்ற மாதம் 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளிலும், இம்மாதம் 1 ஆம், 5 ஆம் திகதிகளிலும் மண்ணெண்ணெய் பெறத்தவறிய மாணவர்கள், ஊழியர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் 4.00 மணி வரை களஞ்சியப் பகுதியில் வைத்து மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெறுமென பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கு ஏதுவாக நாளை முற்பகல் 9.30 மணி முதல் 12.00 மணி வரையும் —

பிற்பகல் 1.30 மணி முதல் 3.00 மணி வரையும் சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் காரியாலயத்தில் இலக்க அட்டைகளைப் பெற்று 88 ரூபாவை நிதிக் கிளையில் சிறாப்பரின் கரும பீடத்தில் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-162)

# வெட்டுப் புள்ளியால் மாணவர் மனம் சோர்ந்துவிடக் கூடாது

## பரிசளிப்பு விழாவில் கல்விப் பணிப்பாளர் உரை

வெட்டுப் புள்ளிகள் மாணவரின் மனத்தை வெட்டும் புள்ளிகள். இனத்தை வெட்டும் புள்ளிகள். இது கண்டு மாணவர்களாகிய நீங்கள் சளைத்துவிடக் கூடாது. தமிழினத்தை மூடர்கள் என்று அவர்கள் கூறும் நிலைக்கு ஆளாகக் கூடாது. அரசு எந்த வழிகளில் எமது கல்வியை பின்னடையச் செய்தாலும் அதில் வல்லவராக விளங்கக் கூடிய வகையில் மாணவர்கள் தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற யாழ் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு சொன்னார்.

கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:

கிராமங்களில் ... குறைந்த ... பொறுப்பேற்று. அவர்களுக்கு கல்வி வசதி அளிக்க தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகம் முன்வர வேண்டும். மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நாடி ஓடும் நிலை மாறவேண்டும். தமது ஆசிரியர்கள் மீது அவர்கள் நம்பிக்கை வைத்து கல்வியைத் தொடர வேண்டும் என்றார்.

அதிபர் திரு சண்முகநாதபிள்ளை பேசும்போது வசதிகளை இழந்து போரின் தாக்கத்தினால் எமது மாணவர்கள் அல்லல்களைச் சந்தித்த போதும்கூட எமது தளராத முயற்சியினால் தமது கல்வி வளர்ச்சியில் முன்னிலையை எடுக்கின்றனர், எமது கல்லூரி பல்வேறு கஷ்டங்களையும் பொருட்படுத்தாது சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணியினை உரிய முறையில் செயலாற்றி நிமிர்ந்து நிற்கிறது என்று கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. அருள் மாஸ்டர் பேசும்போது

இராணுவ நடவடிக்கை ... இறது ஸ்ரீலங்கா அரசு, இந்தச் சூழ்நிலையில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களின் கல்விக்காக தமது கல்வியைத் துறந்து களத்திலே நிற்கிறார்கள். எமது போராளிகள்.

பலதரப்பட்ட இன்னல்களினால் போராட்டத்தை மழுங்கச் செய்ய முனைகிறது அரசு.

தமிழ் மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் நோக்குடன் பரீட்சைகளைக் கூட நிறுத்தி வைத்த எனினும் நாம் தமிழீழத்தில் பரீட்சைகளை நடத்தி அரசின் திட்டங்களை முறியடித்தோம் என்றார்.

யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு சி. வேலாயுதம் மாணவர் ஸ்ரீதரன் ஆகியோரும் பேசினார்கள். மாணவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் யாழ். கல்விப்பணிப்பாளர் திரு சுந்தரலிங்கம் வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (த-111)

## இன்று

யாழ் மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தால் நடத்தப்பட்ட விசேட செயலமர்வு கலந்து கொண்ட சகல கணித பாட ஆசிரியர்களுக்குமான இறுதி நாள் செயலமர்வு இன்று திங்கள் காலை 8.30 மணி முதல் நடைபெறும். (த)

ஃ ஃ ஃ

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் வருடாந்த பரிசுத்தின விழா இன்று திங்கள் பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு. ஜி. வி. இராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். (த-90)

ஃ ஃ ஃ

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினால் நடத்தப்படும் ஆசிரியர் கற்பித்தல் உபகரணக் கண்காட்சி (ஆண்டு 1) இன்று திங்கள் காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெறும். (த)

ஃ ஃ ஃ

மருதனார் மடத்தில் இயங்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும். (த-45)

**நீர் இன்றேல் வளம் ஏது?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

